ஒன்பதாம் வகுப்பு : மூன்றாம் பருவம்

தமிழ் இரண்டாம் தாள் வினாவிடைகள்

ஆக்கம்: ச. சேட்டு மதார்சா, பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.
ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி)
உயர்நிலைப் பள்ளி, ஈரோடு – 638001. அலைபேசி - 8883681115

இயல் -1 பொருளிலக்கணம்

1.பொருள் எத்தனை வகைப்படும்?
பொருள் 2 வகைப்படும். அகப்பொருள் , புறப்பொருள்

2.அகப்பொருள் என்றால் என்ன? தலைவன் தலைவியின் அன்பையும் வாழ்ககை நிகழ்வையும் கூறுவது அகப்பொருள்.

3.புறப்பொருள் என்றால் என்ன?
அகம் சாராத அறம் , பொருள் , வீடு , கல்வி , வீரம் முதலியவற்றைக் கூறுவது புறப்பொருள்.

4.ஐவகை நிலத்திற்குரிய முப்பொருட்கள் யாவை?
முதற்பொருள் , உரிப்பொருள் , கருப்பொருள்

5.தொல்காப்பியர் காட்டும் அகத்திணைகள் யாவை?
கைக்கிளை , முல்லை , குறிஞ்சி , பாலை , மருதம் , நெய்தல் , பெருந்திணை ஆகிய ஏழும் தொல்காப்பியர் காட்டும் அகத்திணைகள்.

6.முதற்பொருள் என்றால் என்ன?
நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும்.

7.ஐவகை நிலங்கள் பற்றிக் கூறுக

| திணை | விளக்கம் | இடம் |
|---|---|---|
| குறிஞ்சி | தலைவன் தலைவி உள்ளத்தால் இணைவது | மலை , மலைசார் பகுதி |
| முல்லை | தலைவனுக்காகத் தலைவி காத்திருத்தல் | காடு , காடு சார் பகுதி |
| மருதம் | தலைவன் தலைவி ஊடல்(சிறு சண்டை) | வயல் , வயல் சார் பகுதி |
| நெய்தல் | கடலுக்குச்சென்ற தலைவன் உரிய நேரத்தில் வராமையால் தலைவி வருந்துதல். | கடல் , கடல் சார்பகுதி |
| பாலை | தலைவன் தலைவியைப் பிரிதல் | சுரம் ,சுரம் சார் பகுதி |

8.பொழுது எத்தனை வகைப்படும்?
பொழுது 2 வகைப்படும்.சிறுபொழுது , பெரும்பொழுது

9.கருப்பொருள்கள் என்றால் என்ன?
வாழ்வியல் சார்ந்த பின்னணிப் பொருள்கள் கருப்பொருள்கள் ஆகும்.

10. கருப்பொருள்கள் யாவை?
தெய்வம் , மக்கள் , விலங்கு , உணவு , விலங்கு, மரம் , பறவை , பண் , பறை , தொழில் , யாழ் , ஊர் , நீர் , பூ

11.தொல்காப்பியர் சுட்டும் புறத்திணைகள் எத்தனை?
வெட்சி, வஞ்சி , உழிஞை, தும்பை , வாகை , காஞ்சி , பாடண் முதலிய ஏழும் தொல்காப்பியர் சுட்டும் புறத்திணைகள்.

12.புறப்பொருள் வெண்பா மாலை குறிப்பிடும் புறத்திணைகள் எத்தனை? 12 வகை. வெட்சி, கரந்தை ,நொச்சி ,வஞ்சி , உழிஞை, தும்பை , வாகை , காஞ்சி , பாடாண் , பொதுவியல் , கைக்கிளை , பெருந்திணை.

13.வெட்சித்திணையை விளக்கி, அதன் துறை எண்ணிக்கை குறிப்பிடுக.
பசுக்கூட்டங்களைக் கவர்தலும் மீட்டலும் வெட்சித்திணை. 14 துறைகளை உடையது.

14.வஞ்சித்திணையை விளக்கி, அதன் துறை எண்ணிக்கை குறிப்பிடுக.
மண்ணாசை கருதி போர்தொடுத்தல் வஞ்சித்திணை, எதிர்நின்று போரிடுதல். 13 துறைகளை உடையது.

15.உழிஞைத்திணையை விளக்கி, அதன் துறை எண்ணிக்கை குறிப்பிடுக.
கோட்டையை முற்றுகையிடுதல் , கோட்டையைக் காத்தல் உழிஞைத்திணை. 8 துறைகளை உடையது.

16.தும்பைத்திணையை விளக்கி, அதன் துறை எண்ணிக்கை குறிப்பிடுக.
மன்னனை எதிர்த்துப் போரிடல் தும்பைத்திணை. 12 துறைகளை உடையது.

17..வாகைத்திணையை விளக்கி, அதன் துறை எண்ணிக்கை குறிப்பிடுக.
போர் வீரம் மட்டுமின்றி அனைத்துத் துறைகளிலும் மேம்பட்டு இருத்தல் வாகைத்திணை. 18 துறைகளை உடையது.

18.காஞ்சித்திணையை விளக்கி, அதன் துறை எண்ணிக்கை குறிப்பிடுக.
நிலையாமையை உணர்த்துதல் , உலகில் நல்லநெறியினை மேற்கொள்ளுதல் காஞ்சித்திணை. 20 துறைகளை உடையது.

16.பாடாண் திணையை விளக்கி, அதன் துறை எண்ணிக்கை குறிப்பிடுக.
ஒருவரின் கல்வி , புகழ் ,ஈகை முதலியவற்றைப் போற்றிப் பாடுதல் பாடாண் திணை. 10 துறைகளை உடையது.

சிந்தனை வினா

1.நிலஅமைப்புக்கும் தமிழர் வாழ்வுக்கும் உள்ள தொடர்பு , தற்காலத்தில் பொருந்துமா?
ஓரளவு மட்டுமே பொருந்தும்.தற்காலம் நில அமைப்பால் மட்டும் அக்கால அமைப்பில் உள்ளது. தொழில் முறைகளாலும் . நாகரிக வளர்ச்சியாலும் வாழ்க்கை முறை முற்றிலும் மாறிவிட்டது.

2.காஞ்சித்திணைக்கும் பாடாண் திணைக்கும் உள்ள தொடர்பினை விளக்குக.
நிலையாமையை உணர்த்துதல் , உலகில் நல்ல நெறியினை மேற்கொள்ளுதல் காஞ்சித்திணை. ஒருவரின் கல்வி , புகழ் ,ஈகை முதலியவற்றைப் போற்றிப் பாடுதல் பாடாண் திணை. கல்வி , புகழ் ,ஈகை முதலியவை நன்நெறி யாகும்.

இருதிணைக்கும் உள்ள தொடர்பு: நன்நெறி நடத்தல்

3.ஆநிரை கவர்தலுக்கும் , ஏறு தழுவுதலுக்குமான வேறுபாடுகளை எழுதுக.

| ஆநிரை கவர்தல் | ஏறு தழுவுதல் |
|---|---|
| பசுக்கூட்டங்களை வருத்தாமல் கவர்தல். | காளைகளை வருத்தாமல் அடக்குதல். |
| போர் காரணம் | வீரம் காரணம் |
| புறம் சார்ந்தது | அகம் சார்ந்தது. |

சிறுவினா விடை: தற்குறிப்பேற்றவணி

இலக்கணம் : இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் மனக்கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றவணி.

சான்று: " அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ

வெள்ளம்தீப் பட்டதென வெரீஇப்பு ள்ளினம்"

விளக்கம்: இயல்பான நிகழ்வு : வயலில் ஆம்பல் மலர்தல் .

கவிஞர் மனக்கருத்து : நீர்பறவைகள் வெள்ளத்தில் தீப்பற்றியதாக வருந்தி தன் குஞ்சுகளைக் காத்தல்

விரிவானம் : இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு

1.இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதை கட்டுரை வழி நிறுவுக.

முன்னுரை:

இந்திய விடுதலைப்போரில் இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள். அவர்களைப் பற்றி இனி காண்போம்.

பசும்பொன் முத்து ராமலிங்கனார்:

1943ல் அன்றைய ஆங்கிலேய அரசை இந்திய தேசிய இராணுவப்படை எதிர்த்த போது , பசும்பொன் முத்து ராமலிங்கனார் விடுதலை உணர்வு கொண்ட வலிமை மிக்க தமிழர் பட்டாளங்களை ஒன்றிணைத்து , இந்திய இராணுவத்திற்கு வலுசேர்த்தார். அதனால் இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள் என்றார் தில்லான்.

இரண்டாம் உலகப்போர்

தமிழர் துணையுடன் போராடிய நேதாஜியை , ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் அடைந்து , 'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது 'என்றார், அதற்கு நேதாஜி தமிழினம் தான் ஆங்கிலேயரை அழிக்கும் என்றார்.

மகளிர்ப் படை

ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி . இதில் தமிழகப் பெண்கள் பலர் பங்கேற்றனர். தலைசிறந்தவர்களாக ஜானகி , இராஜாமணி ஆகியோர் விளங்கினர். நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி , சிதம்பர லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக விளங்கினர்.

முடிவுரை

நாட்டிற்காக உயிர் கொடுத்த முகம்தெரியாத தமிழர்களின் உணர்வைப் போற்றி வழிபடுவோம்.

## இயல் - 2 : யாப்பிலக்கணம்

1.யாப்பின் உறுப்புகள் யாவை?
யாப்பின் உறுப்புகள் : 6. எழுத்து, அசை , சீர் , தளை , அடி , தொடை

2.யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்து வகையைக் குறிப்பிடுக. குறில் , நெடில் , ஒற்று என 3 வகைப்படும்.

3.அசை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? எழுத்துகளால் ஆனது அசை, நேரசை , நிரையசை என இருவகைப்படும்.

4.நேரசை , நிரையசை விளக்குக.

நேரசை

| | |
|---|---|
| தனிக்குறில் | ம |
| தனிக்குறில் , ஒற்று | மண் |
| தனிநெடில் | மா |
| தனிநெடில் , ஒற்று | மான் |

நிரையசை

| | |
|---|---|
| இருகுறில் | மட |
| இருகுறில் , ஒற்று | மடல் |
| குறில் ,நெடில் | விழா |
| குறில் .நெடில் , ஒற்று | விழார் |

5.சீர் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

உன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளின் சேர்க்கை அசை ஆகும். 4 வகைப்படும். ஓரசைச்சீர் , ஈரசைச்சீர், மூவசைச்சீர் , நாலசைச்சீர்

6.ஈரசைச்சீர்களுக்குரிய வேறுபெயர்கள் யாவை?

இயற்சீர் , உரிச்சீர்

7.ஓரசைச்சீருக்கரிய வாய்பாடுகள் யாவை?

நேர் - நாள் , நிரை - மலர் , நேர்பு - காசு, நிரைபு- பிறப்பு

8.ஈரசைச்சீருக்குரிய வாய்ப்பாடுகள் யாவை?

நேர் நேர் - தேமா , நிரை நேர் - புளிமா , நேர் நிரை - கூவிளம் , நிரை நிரை - கருவிளம்

9.மூவசைச்சீருக்குரிய வாய்பாடுகள் யாவை?

நேர் நேர் நேர் - தேமாங்காய் ,
நிரை நேர் நேர் - புளிமாங்காய் ,
நேர் நிரை நேர் - கூவிளங்காய் ,
நிரை நிரை நேர்- கருவிளங்காய்

நேர் நேர் நிரை - தேமாங்கனி ,
நிரை நேர் நிரை - புளிமாங்கனி ,
நேர் நிரை நிரை - கூவிளங்கனி,
நிரை நிரை நிரை - கருவிளங்கனி

10.தளை என்றால் என்ன?
நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது தளை எனப்படும்.

11.தளை எத்தனை வகைப்படும்? தளை 8 வகைப்படும். நேரொன்றாசிரியத் தளை , நிரையொன்றாசிரியத் தளை , இயற்சீர் வெண்டளை , வெண்சீர் வெண்டளை , கலித்தளை , ஒன்றிய வஞ்சித்தளை , ஒன்றாத வஞ்சித்தளை.

12.அடி என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?
இரண்டும் இரண்டுக்கும் மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து வருவது அடியாகும்.

| | |
|---|---|
| குறளடி | இரு சீர்களைக் கொண்டது |
| சிந்தடி | மூன்று சீர்களைக் கொண்டது |
| அளவடி | 4 சீர்களைக் கொண்டது |
| நெடிலடி | 5 சீர்களைக் கொண்டது |
| கழிநெடிலடி | 6 சீர்களைக் கொண்டது. அதற்கு மேலும் உள்ள சீர்கள் |

13.தொடை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

அடி அல்லது சீர்களில் எழுத்துகள் ஒன்றி வரத்தொடுப்பது தொடை எனப்படும். 8 வகைப்படும். மோனை, எதுகை , இயைபு, அளபெடை , முரண் , இரட்டை , அந்தாதி , செந்தொடை

விரிவானம் : மகனுக்கு எழுதிய கடிதம் - நா.முத்துக்குமார்

முன்னுரை

கவிஞர் நா.முத்துக்குமார் அவர்கள் தன் மகனுக்கு எழுதிய கடிதத்தின் கருத்துகளை இனிக் காண்போம்.

வாழ்க்கை நாடகம்

உலகம் இப்படித்தான் அழ வேண்டும் , இப்படி தான் சிரிக்க வேண்டும். சிணுங்க வேண்டும். குப்புறக் கவிழ்ந்து , பின் தலைநிமிர்ந்து , அந்தச் சாகத்தைக் கொண்டாட வேண்டும். தரை எல்லாம் தனதாக்கி எழ வேண்டும். விழ வேண்டும். வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தைத் தான் நீ வெவ்வேறு வடிவத்தில் நடிக்க வேண்டும்.

கற்றுப்பார்

கல்வியில் தேர்ச்சி கொள் , இதே நேரம் , அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக் கொள். தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதை விட , தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும். இறக்கும் வரை இங்கு வாழ , சூத்திரம் இதுதான். கற்றுப்பார்.

உனக்கான காற்றை உருவாக்கு

கிராமத்தில் கூரை வீட்டில் வசித்தோம். கோடை காலத்தில் கூரை மீது இருந்து தேள்கள் விழும். இரவு முழுவதும் என் தந்தை விசிறியால் வீசிக்கொண்டே இருப்பார். இன்று விசிறியும் இல்லை . கைகளும் இல்லை.மாநகரத்தில் வாழும் நீ கொடிய பல தேள் பல வடிவத்தில் இருக்கும்.உனக்கான காற்றை நீயே உருவாக்கிக் கொள்.

அறிவுரை

கிடைத்த வேலையை விட , பிடித்த வேலையைச் செய். இனிய இல்லறம் தொடங்கு , யாராவது கேட்டால் , இல்லை எனினும் கடன் வாங்கியாவது உதவி செய்.அதில் கிடைக்கும் மகிழ்ச்சி அதிகமானது.

முடிவுரை

உனக்கு வயதாகும் போது இதை மீண்டும் படித்துப் பார். உன் கண்ணீர் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான்.

இயல் -3 - அணியிலக்கணம்

1.உவமையணி

இலக்கணம்: உவமை , உவம உருபு , பொருள் ஆகிய மூன்றும் வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

சான்று:"இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

விளக்கம்: "மரத்தில் உள்ள கனியை விட்டு காயைக் கவர்தல்" என்பது உவமை. "அற்று" என்பது உவமஉருபு."இனிய சொல் இருக்க துன்பம் தரும் சொல் பேசுதல்" என்பது பொருள். மூன்றும் வெளிப்படையாக வந்ததால் உவமையணி ஆயிற்று.

2.உருவக அணி

இலக்கணம்: உவமையின் தன்மையைப் பொருள் மீது ஏற்றிக் கூறுவது உருவக அணி ஆகும்.

சான்று:"இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக.."

விளக்கம்: இன்சொல் - நிலமாக உருவகப்படுத்தப்பட்டது.

3.வஞ்சப்புகழ்ச்சி அணி

இலக்கணம்: புகழ்வது போலப் பழிப்பதும்,பழிப்பது போலப் புகழ்தலும் வஞ்சப்புகழ்ச்சி அணி எனப்படும்.

எ.கா

"தேவர் அனையர் கயவர் அவருந்தாம்

மேவன செய்தொழுக லான்."

விளக்கம்:

1.இப்பாடலில்,தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறுவது போலக் கூறித்,

2.தீயவர்கள் தம் மனம் போன போக்கில் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறப்பட்டுள்ளது.

3.எனவே,இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆயிற்று.

4.சொற்பொருள் பின்வருநிலையணி.

இலக்கணம்:

செய்யுளில் முன்னர் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

எ.கா.

தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப் படும்..

விளக்கம்:

1.இப்பாடலில்,தீய என்னும் சொல் தீமை என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது.

2.எனவே,இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

5.சொல் பின்வருநிலையணி.

இலக்கணம்:

செய்யுளில் முன்னர் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது சொல் பின்வருநிலையணி எனப்படும்.

எ.கா.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூவும் மழை

விளக்கம்:

1.துப்பு என்பது நல்ல , உணவு ஆகிய வெவ்வேறு பொருளில் வந்துள்ளது.

2.எனவே,இது சொல் பின்வருநிலையணி ஆயிற்று.

**6.**"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படு வார்" இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

பயின்று வரும் அணி : ஏகதேச உருவக அணி

இலக்கணம் : செய்யுள் பொருட்களில் ஒன்றினை உருவகம் செய்து , மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

விளக்கம் : சான்றாண்மை மிக்கவர் கடலுக்குக் கரை என்று உருவகம் செய்த வள்ளுவர், ஊழிக் காலத்தை உருவகம் செய்யாமல் விட்டதால், இ∴து ஏகதேச உருவக அணி

விரிவானம் : தாய்மைக்கு வறட்சி இல்லை

முன்னுரை

தாய்மைக்கு வறட்சி இல்லை என்னும் சிறுகதையை எழுதியவர் சு.சமுத்திரம் . தாய்மை உள்ளத்தை விளக்குவதாய் இக்கதை அமைகிறது.

ஏழ்மைக்குடும்பம்

கர்நாடகத்தில் குல்பர்கா நகரைத் தாண்டிய நெடுஞ்சாலை அருகே ஒரு தோட்டம். அங்கு உள்ள குடிசையில் வாழ்ந்து வரும் குடும்பம் ஒன்று.கணவன் , மனைவி . இரண்டு குழந்தைகள் . இரண்டு நாய்க் குட்டிகள் ஆகியவை குடும்ப உறுப்பினர்கள்.

கிடைத்த உணவு

ஜீப்பில் இருந்து இறங்கிய அதிகாரியும் மற்றவர்களும் இலையில் பிரியானியும்முட்டையும் சாப்பிட்டனர். கஷ்டப்பட்டுக் கொண்டு வந்த தண்ணீரை அவர்களுக்கு அந்த ஏழை கொடுக்கின்றான்.அந்த அதிகாரி மீதி பிரியானி , முட்டை , மற்ற உணவுகளை இலையில் வைத்துக் கொடுத்தான். அதை வாங்கி தன் குடும்பத்தை நோக்கி நகர்ந்தான்.ஆனால் அவன் மனைவி மீதியை வாங்கி வருவதைப் பார்த்து முறைத்தாள்.

குடும்பத்தின் ஏக்கம்

கணவனைக் கோபமாகப் பேசி விட்டு , பார்த்தாள் 3 வயது குழந்தை சாப்பாட்டிற்காக அப்பாவிடம் நின்று கொண்டு அம்மாவை முறைத்தாள். ஒரு வயது குழந்தை நிலா வருவதைப் போல உணவு வருவதைப் பார்த்தது.நாய்களும் வாலாட்டியது.தன் பசி வலியையும் புரிந்து , கணவனிடமிருந்து உணவை வாங்கினாள்.

ஏழைத் தாயின் கலக்கம்

காணாததைக் கண்டடு போல மகிழ்ந்தனர். உணவு தீர்ந்துவிடக் கூடாது என மெதுவாகச் சுவைத்தார்கள்.இரவு உணவுக்கு என்ன செய்வோம் என்று நினைக்கையில் ஒரு உருண்டை உணவைக் கூட அவள் தொண்டை வாங்க மறுத்தது. கத்திய நாய்க் குட்டிகளுக்கு உணவிட்டுத் தடவிக் கொடுத்தாள்.மடியில் வைத்து சிறு உருண்டையை ஊட்டினாள்.உணவு குறைய குறைய தாய்மை உணர்வும் கூடிக் கொண்டிருந்தது.

முடிவுரை

கருவைச் சுமந்திருந்தாலும் கருணையைச் சுமந்திருந்ததால் , தனது வயிரைக் காயப் போட்டு மற்றவர்களுக்கு உணவிட்டாள் தாய். கருணை உள்ளம் கடவுள் இல்லம்.

---

நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாதை எங்கும் பாடங்கள் |
| நுலாசிரியர் | : | பேராசிரியர் . க.இராமச் சந்திரன் |
| வெளியீடு | : | நர்மதாப் பதிப்பகம், சென்னை. |

இந்நூற்றாண்டில் சிறந்த தன்னம்பிக்கை நூலான இந்நூலை அழகாக எழுதியவர் பேராசிரியர் க.இராமச்சந்திரன்.26 தலைப்பின் கீழ் 160 பக்கங்களில் தன்னம்பிக்கைத் தழுவல்கள் மிகுந்து கிடக்கும் நூல் இது.

மாணக்கர்களுக்குப் பணன்படும் வகையில் இனிய . எளிய நடையில் ஆசிரியர் தித்திக்கும் தேன் சுவையில் ஆசிரியார் எழுதியுள்ளார்.

இந்நூலினைக் கற்பதால் அன்பு.அருள் , அறம் . வாய்மை, தன்னலம் கருதாமை , பிறர்க்கென வாழும் தன்மை, ஊக்கம் முதலிய நற்பண்புகளை நன்கு அறிவதற்குக் காரணமாகின்றது.

இந்நூல் தலைசிறந்த சான்றோர்களின் வாழ்க்கைப் பாடங்களையும் , இயற்கை நமக்குக் கற்றுத் தருகின்ற பாடங்களையும் ஒரு சேர இதில் காணலாம்.

இன்றைய தலைமுறை அவசியம் படிக்க வேண்டிய அழகான நூல்

www.padasalai.net

இராணுவத்தில் சிறப்பாகப் பணிபுரிந்து வரும் இராணுவ வீரரைப் பாராட்டிப் பாராட்டு மடல் வரைக.

16,பாரதி நகர்.

ஈரோடு.

நாள்:07.01.2019.

பெருமதிப்புக்குரிய நாட்டுக் காவலரே!

ஐயா அவர்களுக்கு வணக்கங்கள் ஆயிரம். மருத்துவப் பட்டம் பெற்றிருந்தும் மகத்துவமான பணி என்று இராணுவப் பணி என்று ராணுவத்திற்குச் சென்று பணியாற்றி வரும் தங்கள் நாட்டுப்பற்று போற்றுதலுக்கு உரியது. மக்கள் தொண்டே இறைத்தொண்டு என்பார்கள். ஆனால் தாங்களோ மக்களையும் காத்து இறைஇல்லமாகிய நாட்டையும் காத்து வருவது பெருமையளிக்கின்றது.இந்தியக் குடும்பத்தைக் காக்கும் மூத்தமகனே ! தங்கள் பணியைப் பாராட்டி விருது பெற்றதை எண்ணி பெரு மகிழ்வுற்றேன். தங்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள். நன்றிகள் பல!

இப்படிக்கு,

--------------------

உறை மேல் முகவரி

பெறுதல்

ச.கருணன்,
தரைப்படை முகாம்,
காஷ்மீர்.

---

பொதுக்கட்டுரை

பெரியாரின் சமுதாயப் பணி

முன்னுரை : ஏன் ? எப்படி? எதற்கு? என்ற வினாக்கள் எழுப்பி , அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும்.அதன் தந்தை பெரியார்.வெண்தாடி வேந்தர் , பகுத்தறிவு பகலவன், வைக்கம் வீரர் , ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் அழைக்கப்பட்டார்.

இளமை

ஈரோடு நகரில் 1879ல் பெரியார் பிறந்தார். தொடக்கக் கல்வியுடன் தம் படிப்பை நிறுத்திக் கொண்டு . தம் தந்தையின் வணிகத் தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

வைக்கம் வீரர்

கேரளத்தில் வைக்கம் என்னும் ஊரில் தலைவிரித்தாடிய தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். அதனால் வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.

சுயமரியாதை இயக்கம்

பெரியார் காங்கிரஸிலிருந்து விலகி 1925 ல் சுயமரியாதை இயக்கம் தொடங்கினார்.இந்த இயக்கத்தின் வாயிலாக சாதி ஏற்றத் தாழ்வு போக்குதல் , தீண்டாமை ஒழித்தல் ,மூடநம்பிக்கை ஒழித்தல் ,பெண்ணுரிமை நிலைநாட்டுதல் ஆகும்.

பெரியார் சீரமைத்த எழுத்துகள்

'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

பெண்ணுரிமை போற்றியவர்

பெண்ணுரிமை , பெண் கல்வி , சொத்துரிமை , அரசுப் பணி, மறுமணம் ஆகியவற்றிற்காகப் பெரியார் போராடினார்.பெண்கள் மாநாடுகள் பல நடத்தி பெண்களை விழிப்படையச் செய்தார். 13.11.1938 சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராவுக்குப் பெரியார் பட்டம் கொடுக்கப்பட்டது.

முடிவுரை

தொண்டு செய்து பழுத்த பழமான பெரியாரைப் போற்றுவோம்.அவரின் வழி நடப்போம்.

ஆக்கம்: ச. சேட்டு மதார்சா,
பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.
ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி) உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு – 638001. அலைபேசி - 8883681115